களஞ்சியம் - KALANJIYAM
INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

# ஆட்டனத்தி படைப்புகளில் சூழலியல்

**உ ஷாஜிதா பர்வின்**, முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி,பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

**முனைவர் பே.மஹேஸ்வரி**. இணைப்பேராசியர், தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி,பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

ஆய்வுச்சுருக்கம்

சங்க காலம் தொடங்கி நவீன காலம் வரையில் பல்வேறு இலக்கியங்கள் தோன்றுகின்றன. அவ்வகையில் சிறுகதை, புதினம், உரைநடை, கவிதை என நவீன இலக்கியங்கள் பெரும் வளர்ச்சி அடைந்து வருகின்றன. படைப்பாளிகளின் ஆழ்மனதில் ஏற்பட்ட அனுபவங்கள், தாக்கங்கள், உணர்ச்சிகளின் வெளிப்பாட்டை எழுத்து வடிவத்தில் புகுத்தி படைப்புகளாக உருவாக்குகிறார்கள். அவ்விதமான படைப்புகள் மனிதனின் சிந்தனையில் சென்று மாற்றத்தை ஏற்படுத்த வழிவகுக்கின்றன. ஆட்டனத்தி அவர்கள் தங்கள் சிறுகதை மற்றும் நாவல்களில் காடுகளில் காணப்படும் மரங்கள், விலங்குகள், பல்லுயிரிகள், இவற்றைச் சார்ந்து வாழும் மக்களின் கலாச்சாரம், நம்பிக்கைகள், பாடல், திருவிழாக்கள், கல்வி, சமுதாயம், பெண்களின் நிலை என உண்மையான வாழ்க்கை நிகழ்வுகளைப் படைப்புகளாகப் பதிவு செய்துள்ளார். இன்றைய காலச் சூழ்நிலையில் ஏற்படும் இயற்கைப் பேரழிவுகள் மற்றும் சமுதாயச் சிந்தனைகள் குறித்து ஆட்டனத்தி அவர்கள் தனது படைப்புகளின் மூலமாக இயற்கை வளங்கள் அழியாமல் காக்க வேண்டும் என்ற நோக்கில் இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

## சூழலியல்

சூழலியல் என்பது இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையைப் பற்றி அறிவதாகும். சூழலியல் என்பது சுற்றுச்சூழல் சார்ந்த அறிவியல் எனப்படுகிறது.

**“ஹென்ஸ்ரெய்ட்டர் என்பவர் 1868இல் “சூழலியல்” என்ற சொல்லை**

**முதன்முதலில் அறிமுகப்படுத்தினார். Ecology என்ற சொல் கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியதாகும். Oikos என்பதற்குக கிரேக்கத்தில் வாழிடம் அல்லது வீடு என்று பொருள். Logy என்பதற்கு இயல் என்று பொருள். இவ்விரண்டு சொற்களும் கூடி Ecology என்ற சொல் உருவாகியுள்ளது.(திணையியல் கோட்பாடுகள் ப.11)**என்று பாமயன் அவர்கள் கூறுகிறார்.

**வனச் சூழல் (Forest Ecology)**

வனங்கள் நம் நாட்டின் பொருளாதாரத்திற்கு மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. வனங்களில் எண்ணற்ற தாவரங்களும், மரங்களும், அவற்றைச் சார்ந்து வாழும் நுண்ணுயிரிகளும் காணப்படுகின்றன. **"பூமி என்ற கிரகத்தில் 40-50 மில்லியன் தாவரங்களும் விலங்கினங்களும் வாழ்வதாக அறியப்பட்டுள்ளன. இன்னும் சில மில்லியன் உயிரினங்கள் கண்டறியகப்படாமலே உள்ளன. இந்தியாவில் மட்டும் 45,000 தாவர இனங்கள் வாழ்ந்துவருகின்றன. இவற்றில் 17,000 இனங்கள் பூக்கும் தாவர இனங்கள் ஆகும். இப்பூக்கும் தாவர இனங்களிலும் 40% இடச்சூழல் இனங்களாக (endemic species) உள்ளன. சுமார் 3000-4000 இனங்கள் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தவை. இவற்றில 1000 இனங்கள் உணவுத் தாவரங்கள், 500 தாவர இனங்கள் மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்தவை. மானுடத்திற்கு மரபியல் வளமாக 166 இனங்கள் உள்ளன. சுமார் 320 இனங்கள் உணவுத் தாவரங்களுக்கான காட்டின் ஜின் புலம் பெற்றுள்ளன. இந்தியாவில் 1200 பறவை இனங்கள் 317 பாலூட்டிகள் இனங்கள், 489 ஊர்வனங்கள், 2000மீனினங்கள், 50,000 பூச்சியினங்கள் காணப்படுகின்றன."(சுற்றுச்சூழல் பயில்வுகள், ப.177**)என்று ப.சந்திரசேகரன் குறிப்பிட்டுள்ளார்.

காடுகள் அழிவினால் சுற்றுச்சுழல் சமநிலையை இழக்கின்றது. ஆற்றுப்பகுதியில் காணப்படும் காடுகள், மண் அரிப்பையும், வெள்ளப்பெருக்கினையும் தடுக்கின்றன. மரங்களை அதிக அளவில் வளர்ப்பதினால் பூமி வெப்பமயமாதலிலிருந்து தடுக்கப்படுகிறது. மேலும் மக்கள் அனைவரும் தூய்மையான காற்றைப் பெறமுடிகிறது. மேலும் காடுகளிலிருந்து கிடைக்கக்கூடிய அரியவகை மூலிகைகள் மக்களின் தீர்க்க முடியாத நோய்க்கு அருமருந்தாக மாறியுள்ளது என்பதனை,

"**பசுமை வளையம்**" என்னும் சிறுகதையில் "**சிறுவாணி அணைக்கட்டிற்குப் போகிற தார்ச்சாலையில் சாடி வயலிலிருந்து தொடர்ந்து சென்றால், இருமருங்கும் அடர்ந்த காடு… வானத்தை எட்டிப்பிடிக்கப் போட்டிப் போடும் தேக்கு மரங்கள், பிள்ளமருது, கருங்காலி, தோதகத்தி மரங்கள், வேங்கை, தாணி முதலியவை…**

**குட்டையாய் ஆங்காங்கே கடுக்காய், நெல்லி மரங்கள்,** சில்லென்று **வீசும் தென்றல்.. பசுமை மாறா வனம்! சொர்க்கம்... பச்சை மரங்களைக் கொண்டு கோட்டைதான் கட்டியிருக்கிறதோ..." (ஐந்தாம் அறிவு.ப.9)** என்று ஆசிரியர் கூறியிருப்பதிலிருந்து இவ்வகையான மரங்கள் காட்டின் வளத்தை நிலை நிறுத்துகின்றது, என்பதை அறிந்து கொள்ளமுடிகிறது.



மழைபெய்வதால் நிலத்தடி நீர்மட்டம் உயர்வதோடு, மண் அரிப்பையும் தடுக்கின்றது. இவ்வாறாக அழகிய வனத்தை மனிதன் தன்னுடைய தேவைகளுக்காக அழிக்கின்றான். இதன் காரணமாக மலைகளும் அதைச்சார்ந்து வாழும் மரங்களும், விலங்குகளும், பறவைகளும், நீர்நிலைகளும் பாதிப்புக்குள்ளாகின்றன. இன்றைய காலச் சூழ்நிலையில் வனத்துறை அதிகாரிகள் பல இன்னல்களைத் தாண்டியும் காடுகளைப் பராமரித்து வருகிறார்கள். மரங்களை வெட்டுதல், காடழிப்பு, மலைகளைத் தகர்த்தல், ஏரி குளங்களை அகற்றுதல் போன்ற வனங்களின் அழிவினைத் தடுத்தல் வாயிலாக இயற்கை வளங்களை பாதுகாக்க முடியும். அத்தகைய இயற்கை வளமான வனங்களை பாதுகாப்பது குறித்து இக்கட்டுரையின் வாயிலாக அறியப்படுகின்றது.

### வேளாண் சூழல் (Agricultural Ecology)

மனித வாழ்க்கைக்கு அடிப்படையான ஒன்று வேளாண்மை ஆகும். உணவுப்பொருட்கள் மற்றும் இதர பொருட்களை விவசாயத்தின் மூலம் நாம் பெறுகிறோம். **"இன்று வேளாண்மையைக் குறிக்க Agricultural என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றோம்.** **Agricultural என்ற ஆங்கிலச் சொல் இலத்தீன்**

**மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு வந்ததாகும். Ager என்றால் வயல் (Field) Culture என்றால் பண்படுத்துதல்(Cultivate) எனப் பொருள் கொள்கின்றனர். இவற்றை இணைத்து நோக்கினால் நிலத்தை நல்ல வகையில், மற்றவர்களுக்கு வேண்டிய உணவு முதலியவற்றைக் கொடுக்கும் வகையில், நல்ல பயிர் விளையும் வகையில் பண்படுத்துதல் ஆகின்றது."(சமுதாயமும் பண்பாடும், ப.219-220)** என்று அ.மு. பரமசிவானந்தம் குறிப்பிடுகிறார்.



இன்று விவசாய நிலங்களில் பயன்படுத்தக்கூடிய இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளால் வேளாண்மைச்சூழல் பாதிப்படைகிறது. வேதி உரங்கள் பயன்பட்டால் மனிதர்கள், விலங்குகள், பறவைகள் மற்றும் அனைத்து நுண்ணுயிரிகளுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. இதனால் விவசாய நிலங்களில் உற்பத்தி குறைவின் காரணமாக விவசாயிகளுக்கு வேளாண்மை தொழில்களால் பாதிப்பு ஏற்பட்டு அழிவை நோக்கித் தள்ளப்படுகின்றன. இதனை,

**"நாராய்... நாராய்..."** என்ற சிறுகதையில் **"தென்னைகளுக்கு முறையாகத் தண்ணீர்விட்டு, உரம் வைத்து வளர்ச்சியைப் பார்க்கலாம் என்றால் காண்டாமிருக வண்டு, சிவப்புக்கூன் வண்டு, குருந்தழுவல் நோய் என்று எத்தனை எத்தனை பாதிப்பு! களை எடுத்து, மருந்து அடித்து நீர் பாய்ச்சி... பாளை போட்டது. பிஞ்சுகள் ஆங்காங்கே விழுந்த வண்ணம் இருந்தன! தண்ணீர் அதிகமாக இருந்தாலும் இல்லாமல் போனாலும் விழும்." (மனுசி.ப.2)** எனவே, இதனைத் தடுக்க விவசாய நிலங்களைச் சரியான முறையில் பயன்படுத்தி மண்வளத்தை காத்து, பல்லுயிர்

பெருக்கத்தை அதிகரிக்க வேண்டும். காலநிலைக்கு ஏற்ப விவசாயம் செய்வதால் வேளாண்மை அழிவிலிருந்து பாதுகாத்துக் கொள்ளமுடியும். அவ்வகையில் வேளாண் சூழலின் முக்கியத்துவத்தையும் அதனை மேம்படுத்தவதைப் பற்றியும் ஆசிரியர் இச்சிறுகதையில் எடுத்துரைத்துள்ளார்.

**உயிரினச் சூழல் (Biodiversity Eco)**

மனிதனைச் சுற்றிவாழும் அனைத்து உயிரினங்களும், உயிரினச் சூழல் ஆகும். பூமியில் வாழும் உயிரினங்கள் அனைத்தும் சுற்றுச்சூழலை எதிர்த்து போராடிக் கொண்டிருக்கின்றன. இவ்வுயிரினங்களின் வகைகளுக்கு ஏற்ப வாழ்விடங்களும் வளரியல்புகளும் வேறுபடுகின்றன. பூமியில் உள்ள முக்கிய வளங்களில் ஒன்றாகத் திகழ்வது உயிரின வளங்கள் ஆகும். உயிரினங்களின் வாழ்நாளானது இப்புவியில் வரையறுக்கப்பட்டதாகும். எனவே, எந்த ஒரு உயிரினமும் நீண்ட நாள் உயிர்வாழ இயலாது. அனைத்து உயிரினங்கள் தன்னை ஒத்த உயிரினத்தை உருவாக்கும் திறன் பெற்றுள்ளதாகக் காணப்படுகின்றது. தன்னைப் போன்ற உயிரினங்கள் தோன்றுவதற்கு சூழல் வழிவகுக்கின்றது. மனிதனின் உணவுத் தேவைகளுக்காக உயிரினங்களை வேட்டையாடுகின்றான். விலங்குகள், பறவைகள், நுண்ணுயிரிகள் அனைத்தும் மனிதனைப் போல் பாசம், பற்றுகொண்டவைகளாக விளங்குகின்றன.

இதனை, 

“நாராய்… நாராய்…” என்ற சிறுகதையில் “**நீலகிரி காட்டுப்புறா, செம்பழுப்புப் புறா, செஞ்செதில் தவிட்டுப்புறா, சிறிய தவிட்டுப்புறா, புள்ளிப்புறா, செந்தவிட்டுப் புறா, பட்டைக் கழுத்துப்புறா, பஞ்சவர்ணப்புறா, ஆரஞ்சு மார்பு பச்சைப்புறா, சாம்பல்**

**நெற்றிப்பச்சைப் புறா, மஞ்சள் கால் பச்சைப் புறா, பச்சை அரசப்புறா, மலை அரசப் புறா.. இத்தனை வகைப் புறாக்களையும் என் அப்பா எப்படிக் கொண்டு வந்தார் என ஆச்சரியப்பட்டுப் போவேன்."(மேலே வானம்.ப.80)** என ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். ஆட்டனத்தி படைப்புகளில் விலங்குகளின் வகைகள், பறவைகளின் வகைகள், அவைகளின் உணவுமுறை, பழக்கப்படுத்துதல், அன்பு, தாய்மை, ஒற்றுமை, உருவத்தோற்றம், காதல், குடும்ப பற்று, அச்சம், கோபம்,வாழிடம் வேட்டையாடுதல் போன்ற செய்திகள் அமைந்துள்ள விதத்தினையும் உயிரினச்சூழல் விளக்கிக்கூறுவதாக அமைகிறது.

**சமூகச் சூழல் (Social Ecology)**

மனிதன் தொடக்க காலங்களில் காடு, மலை, குகை என பல்வேறு இடங்களில் வாழ்ந்து வந்தான். தனியாக வாழ்ந்து வந்த மனிதன் மழை, புயல், வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களினால் குழுவாக வாழத்தொடங்கி சமுதாயத்தை உருவாக்குகிறார். மனிதனின் வாழ்க்கைத் தரத்திற்குத் தேவையான உணவு, உடை, இருப்பிடம் மற்றும் சமுதாயப் பாதுகாப்புகளை உள்ளடக்கியது "சமூகச் சூழல்" ஆகும். **"சமூகம் என்பது மிகப்பெரிய மக்கள் குழு. தனக்கென்று ஒரு குறிப்பிட்ட பண்பாட்டைக் கொண்டது. தானே வளரும் ஆற்றல் உடையது. இந்த குழு தனக்கு வேண்டியவற்றை நிறைவு செய்து கொள்ளும் ஆற்றலுடையது. ஒவ்வொரு மனிதனும் சமூகத்தில் ஒரு உறுப்பினராக உள்ளான். உறுப்பினர் சிறப்படையும் போது முழுப் பொருளாகிய சமூகமும் சிறப்புப்பெறுகிறது. எனவே தனிமனிதன் சமூக பொருளாதார - பண்பாட்டுத் - தளங்களில் உயர்வடையச் செய்ய வேண்டியுள்ளது." (ஆ. ஜெகதீசன், தமிழ் இலக்கியத்தில் மனித உரிமைக் கோட்பாடுகள், ப.154)** என்று கூறிப்பிட்டுள்ளார்.



மக்கள் ஒருவரையொருவர் வாழ்வுக்காகவும், பாதுகாப்புக்காகவும், வளர்ச்சிக்காகவும் மற்றவர்களைச் சார்ந்தும், சேர்ந்தும் வாழக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. தன் வாழ்க்கை நிகழ்வுகள் மீது மனிதன் கொண்ட நம்பிக்கைகள் ,எதிர்ப்பார்ப்புகள், நிறைவேறும் போது மகிழ்ச்சியடைக்கிறான். அதே சமயம் தன் தேவைகள், விருப்பங்கள் ஆகியவை சமூகத்தினால் நசுக்கப்படும்போது பல்வேறு அவலங்களை மனித சமுதாயம் எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை அமைகின்றன. அந்த வகையில்

**“வனம்”** என்ற நாவலில் **“இருளர்கள் படிப்பறிவு இல்லாத அப்பாவிகள்… வேறு யாராவது தவறு செய்தாலும் இருளரைப் போலியாக அதில் சேர்த்து நீதிமன்றத்தின் முன் நிற்க வைக்கும் கொடுமையும் நடந்திருக்கு… இதனால் மனமுடைந்து பலர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்… ஞானசேகரன் போன்றவர்கள் இவர்களெத் தப்புச் செய்யத் தூண்டுறாங்க..” ரேஞ்சர்.. மாவட்ட வன அலுவலரிடம் இப்படித் தான் சொல்லிக் கொண்டிருந்தார்.(ப.71)** என்று இருளர்கள், சமுதாயத்தால் ஒடுக்கப்படுகிறார்கள் என்பதை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

வனம் மற்றும் பால்கூடாரம் நாவல்களில் இருளர், குறும்பர் இன மக்களின் குடியிருப்பு முறை, குடும்ப அமைப்பு, உணவுப் பழக்கங்கள், குலதெய்வ வழிபாடு, சகுனம் பார்க்கும் வழக்கம் விருந்தோம்பல், உணவு சேகரிப்பு, மூலிகை மருந்துவ அறிவு, ஆடு,மாடு மேய்த்தல், வேளாண்மை, பொருளாதார நிலை,நகர நாகரிக வாழ்க்கை முறை, கல்வி,சமூகக் கட்டுப்பாடு போன்றவற்றினால் ஏற்படும் சமூகச் சூழல் பாதிப்பினையும், பாதுகாப்பினையும், இனவரையியல் குறித்து விளக்கத்தினை ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

**பெண்ணியச் சூழல் (Eco Feminism)**

பெண்களின் சம உரிமைக்காக போராடுவதே பெண்ணியம் ஆகும். பெண்களின் சூழ்நிலைகளைப்பற்றி உலகம் முழுவதும் பேசப்பட்டாலும் பெண்கள் தங்கள் உரிமைகளை, முழுமையாகப் பெறவும், ஏற்றத்தாழ்வுகளிலிருந்து விடுபடவும் போராடிக் கொண்டே இருக்கிறார்கள்.

**“ஆண் பெண் இருவரின்**
**உண்ணும் உணவிலே பாகுபாடு;;**
**உடுத்தும் உடையிலே பாகுபாடு;**
**பேசும் மொழியிலே பாகுபாடு;**
**பழகும் முறையிலே பாகுபாடு;**
**காட்டும் அழகிலே பாகுபாடு;”**

**(ஜெ.செல்வக்குமார், பெண்ணியம் பேசுகிறேன், ப.13)**

இவ்வாறாக ஆண்கள், பெண்களுக்கு இடையே ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளைக் ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

பெண்கள் சுதந்திரத்திற்காக பல சட்டங்கள் இயற்றப்பட்டாலும் அவர்களின் வாழ்க்கைச் சூழலியலில் ஒடுக்குமுறைகள் மட்டும் காணப்படுகின்றது. அவ்வொடுக்கு முறைகளைத் தகர்த்தெறிந்து சாதனைப் பெண்களாக வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். என்பதை, **“அவளா இவள்…”** என்ற சிறுகதையில், நிர்மலா தேவி பிரபல நடிகை. அவரின் கணவர் கோபாலன். இருவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்கள். திடீரென்று இரயில் பயணத்தில் நிர்மலாதேவி இறந்துவிடுகிறாள். அதனின் மர்மம் காவல்துறையின் கண்டுபிடிப்பின்போது **“அவசரப்படாதே… இப்போது சிங்கப்பூர் போவதற்கான ஏற்பாடுகளை உடனே செய்தால்… வித்யாவே நம்மைக் காட்டிக்கொடுத்து விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை… நான்தான் நிர்மலாதேவியும் வித்யாவும் கோயமுத்தூருக்குப் புறப்படுகிறபோது… பால் இருந்த பிளாஸ்கில் ஒரு டஜன் தூக்க மாத்திரையைப் பொடி செய்து கொட்டினேன்.. அதைக் குடித்துத்தானே நிர்மலாதேவி இறந்து போனாள்..தொடர்ந்தான் கோபாலன்: “இல்லாவிட்டால் பிளாஸ்கே போலீஸிக்குக் காட்டிக் கொடுத்திருக்கும்… இப்போது சொத்துக்களை அவசரமாக செட்டில் பண்ணினால் சந்தேகப்படுகிற போலீஸ் என்னைப் பிடித்துவிடும்… அதனால் கொஞ்சம் பொறு…ம் ம்… ராத்திரியில் தூக்கம் வரமாட்டேன் என்கிறது… ப்ளிஸ்..” என்று சொல்லி… குப்புறப் கவிழ்ந்து படுத்திருந்த தன் ஆசைநாயகி ராணியை மல்லாக்க புரட்டினான் கோபாலன்! (இராத்திரியில் தூக்கமில்லை. ப.16)** இவ்வாறு சொத்துக்காக தன் கணவனாலே கொலை செய்யப்படுகிறாள். இதனால் பெண்களுக்கு பாதுகாப்பு அற்ற சூழ்நிலை ஏற்படுகிறது என்பதனை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.



இக்கால சூழுலில் பெண்கல்வி, பெண்சிசுக் கொலை, குழந்தைப்பேறு இன்மை, மறுமணம், கற்பழிப்பு, விதவை, என்று ஆண் ஆதிக்க சமூகத்தால் பாதிக்கப்பட்டு வாழ்ந்து வருகிறார்கள். பெண்ணியச்சூழல் என்ற கட்டமைப்பைக் கட்டுடைத்துச் சுதந்திரமான வாழ்வை வாழ, வழிவகை செய்கின்றது. இவ்வகையில் பல சோதனைகளைத் தாண்டியும் பெண்கள் பல்வேறு துறைகளில் சாதனைகள் படைத்து வருகிறார்கள். இவ்வாறு பெண்களின் முன்னேற்றத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதை தெளிவுப்படுத்தும் நோக்கில் படைப்புகள் அமைந்துள்ளது.

**முடிவுரை**

இக்கால மக்கள் செயற்கைச் சூழலைச் சார்ந்து வாழ்வதால் ஏற்படும் இயற்கைப் பேரழிவுகள் பற்றி அறிவதில்லை. இயற்கை வளங்களை மீட்டெடுக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல்பட்டால் இயற்கைச் சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பதை ஆட்டனத்தி அவர்கள் தன் படைப்புகள் மூலமாக உண்மை நிகழ்வுகளை குறிப்பிட்டுள்ளார் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது.

துணைநூற்பட்டியல்


1. ஆட்டனத்தி - அவளா இவள்... சிறுகதை தொகுப்பு
2. ஆட்டனத்தி - வனம் நாவல்
3. ஆட்டனத்தி - பசுமை வளையம் சிறுகதை தொகுப்பு
4. ஆட்டனத்தி - நாராய்...நாராய்...
5. சந்திரசேகரன்.ப - சுற்றுச்சூழல் பயில்வுகள்
6. செல்வக்குமார்.ஜே - பெண்ணியம் பேசுகிறேன்
7. பரம சிவானந்தம்,அ.மு - சமுதாயமும் பண்பாடும்
8. பாமயன் - திணையியல் கோட்பாடு
9. ஜெகதீசன்.ஆ - தமிழ் இலக்கியத்தில் மனித உரிமைக் கோட்பாடுகள்